கடந்த மாத பதிவுகள்

# தேனீ இணையத்தளம்

www.Thenee.com / www.Theneeweb.de Email: Thenee41@hotmail.com / Theneeweb@yahoo.de

தேனீ 10 வருடங்கள் 22.02.2002 - 22.02.2011

Online Newspaper in Tamil Vol.10 01.07.2012

முதற்பக்கம்
யாழ்மாநகரசபை
ஆனந்தசங்கரி
ஈ.பி.ஆர்.எல்.எப்
ஈ.பி.டி.பி
ஈரஅனல்
நெருப்பு
புளொட்
தூ
டெலோ நியூஸ்
இலங்கைநெற்
மீன்மகள்
சூத்திரம்
மகாவலி
உண்மைகள்
கவிமலர்
கிருத்தியம்
அலை
பூந்தளிர்
எங்கள்தேசம்
நோயல்நடேசன்
விடிவெள்ளி
எங்கள்பூமி
தமிழ்யுகே
புயல்
புளொட்யுகே
யாழமுஸ்லீம்
புண்ணியாமீன்
யவ்னா ருடே
எஸ்.ஆர்.லெம்பட்
பஷீர்
தமிழ்யூஎன்
கவசங்களைதல்
தூங்காத கண்கள்
யாழ்மண்
தமிழ்குரல்
துருவம்
தினசரி
இலங்கை முஸ்லீம்
ஆயுள்
ஆறாம் அறிவு
எதுவரை
அறிக்கை நியூஸ்
ARRR
Asientribune
The lka academic
Tamil Week
The Hindu
Daily News
Sunday Times
Daily Mirror
The island
The Sunday Leader
ColomboPage
Sunday Times
CNN
BBC
Newsnow

## புலிகளின் வதை முகாம்களில் ஒன்றரை ஆண்டுகள் துன்புற்ற தோழர் மணியம் எழுதும் அனுபவத்தொடர் (55)

55. புதுவை புராணம்!



புதுவை இரத்தினதுரையைப் பற்றி இந்த இடத்தில் சில தகவல்களைச் சொல்வது அவசியம் எனக் கருதுகிறேன். அவர் 1969ன் பிற்பகுதியில்தான் எமது கட்சியுடன் தொடர்களை ஏற்படுத்திக் கொண்டவர். அவரது சிறிய தகப்பனாரான யாழ்.திருநெல்வேலியைச் சேர்ந்த பிரபல சிற்பாச்சாரியாரான 'தேர்' கந்தசாமி கம்யூனிஸ்ட் கட்சியின் ஒரு தீவிர உறுப்பினராக இருந்தவர். அதன் காரணமாக இரத்தினதுரைக்கும் கம்யூனிஸ்ட் கட்சியில் ஈடுபாடு வந்திருக்கலாம் என நினைக்கிறேன். ஆனால் 1964ல் சித்தாந்த வேறுபாடு காரணமாக கம்யூனிஸ்ட் கட்சி பிளவுபட்ட போது, அவரது சிறிய தகப்பனார் மொஸ்கோ சார்பு அணியில் இணைந்து கொண்டார். அது நடந்து சில ஆண்டுகளின் பின்னர் அரசியலில் ஈடுபாடு கொண்ட இரத்தினதுரை தனது சிறிய தகப்பனாரின் அணிக்குப் போகாமல் எமது சீனசார்பு அணியில் இணைந்து கொண்டாhர். அதற்கொரு காரணம், எமது கட்சி அக்காலகட்டத்தில் வடபகுதியில் தீவிரமாக நடாத்தி வந்த தீண்டாமைக்கு எதிரான போராட்டம் பல தமிழ் இளைஞர்களை ஈர்த்தது போல இரத்தினதுரையையும் ஈர்த்திருக்கலாம்.

அவர் எம்முடன் சேர்ந்த பின்னர் (1971ல்) 'வானம் சிவக்கிறது' என்ற தனது முதலாவது கவிதைத் தொகுதியை வெளியிட்டார். அதற்கு தோழர் மு.கார்த்திகேசன் மிகச் சிறந்ததொரு முன்னுரையை எழுதி அளித்தார். (அதன் ஒரு பிரதி இப்பொழுதும் என்னிடம் இருக்கிறது) அந்தக் கவிதைத் தொகுதியின் வெளியீட்டிலிருந்து விற்பனை வரை எமது கட்சியே முன்னின்று உழைத்தது. நான் அப்பொழுது வவுனியா பகுதியில் கட்சி வேலையில் ஈடுபட்டிருந்ததால், அங்கு அக்கவிதைத் தொகுதியை விற்பனை செய்தேன். அக்காலகட்டத்தில் நாம் கிளிநொச்சியிலிருந்து வெளிக்கொணர்ந்த 'களனி' என்ற காலாண்டுச் சஞ்சிகையிலும் அரவது கவிதை ஒன்றை 'வாலிபத்தின் முல்லைகளே' என்ற தலைப்பில் பிரசுரித்திருந்தோம்.

அவரது கவிதை முயற்சிக்கு அதிகமாகக் களம் அமைத்துக் கொடுத்தது, கொழும்பிலிருந்து பிரபல எழுத்தாளர் செ.கணேசலிங்கன் வெளியிட்டு வந்த 'குமரன்' மாத இதழ்தான். ஏறத்தாழ அதன் ஒவ்வொரு இதழிலும் அவர் தனது மனைவியின் பெயரை (வரதலக்ஸ்மி) புனைபெயராகக் கொண்டு 'வரதபாக்கியான்' என்ற பெயரில் கவிதைகள் எழுதினார். அதே காலகட்டத்தில் எமது கட்சியைச் சேர்ந்த மட்டக்களப்பு கவிஞரான (இப்பொழுது காலமாகிவிட்டார்) தோழர் சாருமதி (எஸ்.யோகநாதன்) அவர்களும் 'குமரன்' இதழில் தொடர்ந்து கவிதைகள் எழுதினார்.

1972ல் எமது புரட்சிகர இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சிக்குள் பிளவு ஏற்பட்டு நா.சண்முகதாசன் தலைமையில் சிலரும், மு.கார்த்திகேசன், வொட்சன் பெர்னாண்டோ போன்றோர் தலைமையில் நாமும் இரண்டு அணிகளாகச் செயற்படத் தொடங்கினோம். புதுவை இரத்தினதுரை சண்முகதாசன் அணியில் இணைந்து கொண்டார். சிறிது காலத்தில் அதிலிருந்தும் ஒதுங்கிக் கொண்டார். பின்னர் சிறிது நாட்களில் சிங்கப்பூரிலுள்ள கோவில் ஒன்றுக்கு தேர் வேலைகள் செய்வதற்காகச் சென்ற குழுவொன்றில் தன்னை இணைத்துக்கொண்டு, அங்கு சென்று சில மாதங்கள் தங்கி நின்று வேலை செய்தார். அவர் அங்கிருந்த காலத்தில் எமது கட்சியைச் சேர்ந்த மிகச் சிறந்த மட்டுநகர் கவிஞர்களில் ஒருவரான தோழர் சுபத்திரன் காலமானார். அவரது மறைவுபற்றி அங்கிருந்து கொழும்பு பத்திரிகை ஒன்றில் இரங்கல் கவிதை எழுதிய இரத்தினதுரை, 'நாற்றுக்கள் நாமிருக்க நட்டவன் நீ போய்விட்டாயே' என அழகாகவும் இரத்தினச் சுருக்கமாகவும் அவரது இழப்பைப் பதிவு செய்தார்.

பின்னர் இலங்கை திரும்பிவந்த அவர், அரசியலில் மிகவும் விரக்தியுற்றவராக இருந்தார். பெரும்பாலான நாட்களில் அவரை யாழ்.கஸ்தூரியார் வீதியிலிருந்த பிரபல மதுபானக் கடையான 'கொழும்பு றெஸ்ரோறன்ற்'றில் காணக்கூடியதாக இருந்தது. நல்லூர் வீதியில் தினமும் கூடும் அவ்விடத்து இளைஞர்களுடனும் அவர் அடிக்கடி காணப்படுவார். அப்பொழுது வடக்கில் தமிழ் இளைஞர்களின் சட்டவிரோத நடவடிக்கைகள் தீவிரமடைந்திருந்த காலகட்டமது.

சிறிது காலத்தின் பின்னர் புதுவை இரத்தினதுரை புலிகள் இயக்கத்தில் இணைந்து கொண்டதாகத் தகவல் வந்தது. அவர் எமது கட்சியிலிருந்து விலகி நேரடியாகப் புலிகள் இயக்கத்துக்குச் செல்லவில்லை. இடைப்பட்ட காலத்தில் பலவிதமான சீரழிவுகளுக்கு உட்பட்ட பின்னர் சென்றடைந்த இடமே புலிகள் இயக்கம் என்பதை இங்கு குறிப்பிட்டே ஆகவேண்டும்.. ஏறத்தாழ இதே நிலையில்தான் எமது கட்சியிலிருந்துவிட்டுப் பின்னர் புலிகள் இயக்கத்தில் இணைந்து பிரமுகர்களான, மூர்த்தி (புலிகளின் முன்னைய அரசியல் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனின் சகோதரர்), நா.யோகேந்திரநாதன் (எமது கட்சியின் முன்னைய கிளிநொச்சிப் பொறுப்பாளர்களில் ஒருவர்) மட்டுவிலைச் சேர்ந்த முருகேசு மாஸ்டர் (புலிகள் இயக்கத்தில் அன்பு மாஸ்டர்) ஆகியோரது கதைகளும் உள்ளன.

புதுவை இரத்தினதுரை புலிகள் இயக்கத்தில் இணைந்து கொண்ட பின்னர் என்னென்ன செய்தார், எப்படி அவ்வியக்கத்தின் ஆஸ்தானக் கவிஞராக மாறினர் என்பதையெல்லாம் இங்கு விபரிப்பது அவசியமில்லை. ஆனால் அவருடன் புலிகளின் கலை பண்பாட்டு இயக்கத்தில் முக்கிய பொறுப்பில் இருந்து, பின்னர் இறுதி யுத்த நேரத்தில் தப்பி யாழ்ப்பாணம் ஓடி, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் காலடியில் சரணடைந்து இன்று அவரது நிழலில் பாதுகாப்பாக இருக்கும் ஒருவர் குறிப்பிட்டது போல, புதுவை இரத்தினதுரை போன்றவர்கள் எப்படி சாதாரண புலி உறுப்பினர்களைவிட மோசமாக நடந்து கொண்டார்கள் என்பதற்கு இங்கு ஒர் உதாரணத்தைக் குறிப்பிட விரும்புகிறேன்.

நான் குறிப்பிடும் இந்தச் சம்பவத்தைச் எனக்குச் சொன்னவரும், முன்பு எமது கட்சியில் இருந்து பின்னர் புலிகளுடன் இணைந்து புதுவை இரத்தினதுரை தலைமையிலான புலிகளின் கலை பண்பாட்டுக் கழகத்தில் கிளிநொச்சிப் பகுதியில் வேலை செய்த ஒருவர்தான். அந்தத் தகவல் இதுதான்:

1990ல் இந்திய அமைதிப்படை வெளியேறிக் கொண்டிருந்த நேரத்தில் அதனுடன் சேர்ந்து செயல்பட்ட பல இயக்கங்களின் உறுப்பினாகள் பாதுகாப்புக் கருதி கொழும்ப நோக்கி ஓடிக்கொண்டிருந்தனர். அதற்கு அவர்கள் பெரும்பாலும் காங்கேசன்துறை – கொழும்பு புகையிரதத்தையே பயன்படுத்தினர். அப்படிச் சென்றவர்களின் புகையிரதங்களை புலிகள் ஆனையிறவுக்கும் பரந்தனுக்கும் இடையில் உமையாள்புரத்தில் நிறுத்தி அதில் மாற்று இயக்கங்களைச் சேர்ந்தவர்கள் யாராவது இருக்கிறார்களா என ஆராய்ந்து கைதுசெய்த வண்ணம் இருந்தனர்.

இது நடந்து கொண்டிருந்த காலகட்டத்தில் ஒருநாள் புதுவை இரத்தினதுரை தனது புலி இராணுவச் சீருடையை அணியத் தொடங்கியிருக்கிறார். இதை அவதானித்த எனக்குத் தகவல் சொன்னவர், "எங்கே செல்கிறீர்கள்?" எனக் கேட்டிருக்கிறார். அதற்கு இரத்தினதுரை, "உமையாள்புரத்தில் புகையிரதத்தில் இந்திய இராணுவத்துடன் சேர்ந்து செயல்பட்ட ஒட்டுக்குழுவைச் சேர்ந்தவங்களைப் பிடிக்கப் போகிறோம்" எனச் சொல்லியிருக்கிறார். அதற்கு அவர் "அதை இயக்க ஆட்கள் செய்வினம்தானே?" எனக் கேட்டிருக்கிறார். அதற்கு புதுவை இரத்தினதுரை சொன்ன பதில் என்ன தெரியுமா?

"இயக்கப் பொடியள் ஆரும் இளம் ஆட்களைக் கண்டால்தான் பிடிப்பாங்கள். வி.ஏ.கந்தசாமி போன்ற வயதுபோன ஆட்கள் போனால் ஆரோ ஒரு கிழவன் போறார் எண்டு விட்டிடுவாங்கள். நான் போனன் எண்டால் அப்பிடியான ஆட்களை அடையாளம் காட்டி பிடிக்கச் சொல்லலாம்"


Yarl TV Live
புலிகளின் வதை முகாம்களில் ஒன்றரை ஆண்டுகள் துன்புற்ற தோழர் மணியம் எழுதும் அனுபவத்தொடர்
சிங்களவர்கள் ஆகிய நாங்கள்
யாழ்ப்பாணத்தின் அவலம்!
பரீசில் பரிதிமீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்: புலிகளின் உள்ளக அதிகாரப் போராட்டம் (பகுதி-1)
பரீசில் பரிதிமீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்: புலிகளின் உள்ளக அதிகாரப் போராட்டம் (பகுதி-2)
ராஜீவ் கொலையாளிகளின் குற்றப் பின்னணி!
தமிழ் மக்கள் இழந்து வரும் சந்தர்ப்பங்கள்
றொபேட் பிளேக், தயவுசெய்து ஸ்ரீலங்கா மக்களுக்குப் பதில் சொல்லுங்கள் (1)
றொபேட் பிளேக், தயவுசெய்து ஸ்ரீலங்கா மக்களுக்குப் பதில் சொல்லுங்கள் (2)

இதுதான் அவர் சொன்ன விளக்கம்.

புதுவை இரத்தினதுரை எமது கட்சியில் இருந்த காலத்தில் எமது கட்சியின் வட பிரதேசச் செயலாளராக இருந்து, திருமணம் கூடச் செய்து கொள்ளாமல், கட்சிக்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றிய உத்தமர் தோழர் வி.ஏ.கந்தசாமி. இப்படிப்பட்ட ஒரு தோழரைக் கைதுசெய்துவிட வேண்டும் என்பதில் புதுவை இரத்தினதுரை எப்படி வெறிபிடித்து நின்றிருக்கிறார் என்பதைப் பாருங்கள்.

இவ்வளவுக்கும் தோழர் வி.ஏ.கந்தசாமி செய்த குற்றம் என்ன? தேசிய இனப் போராட்டம் தீவிரமாகி எமது கட்சி செயலற்ற ஒரு நிலைக்குத் தள்ளப்பட்ட போது, எமது கட்சியிலிருந்த சிலர் பல்வேறு தமிழ் ஆயுதப் போராட்டங்களில் இணைந்து கொண்டனர். தோழர் வி.ஏ.கந்தசாமி அன்றிருந்த இயக்கங்களில் ஒப்பீட்டு வகையில் முற்போக்கானதாகத் தான் இருந்த ஈ.பி.ஆர்.எல்.எப் இயக்கத்தினருடன் இணைந்து, அவர்களின் ஈழத் தொழிற்சங்க சம்மேளனத்தின் தலைவராக செயற்பட்டதுடன், அவர்களின் சார்பாக வடக்கு கிழக்கு மாகாணசபையில் ஒர் உறுப்பினராவும் செயலாற்றினார். அவரது இந்த செயற்பாடுதான் புதுவை இரத்தினதுரைக்கு அவர்மீது கோபாவேசம் வரக் காரணம்.

இதேநேரத்தில் புதுவை இரத்தினதுரை போன்ற சந்தர்ப்பவாதப் புலிகளுக்கும் பிழையானவர்கள் என்றாலும் உண்மையான புலிகளுக்கும் உள்ள வேறுபாட்டைக் காண்பதற்கும் இன்னுமோர் உதாரணம் இருக்கின்றது. ஈ.பி.ஆர்.எல்.எப் இயக்கத்தைப் புலிகள் தடைசெய்து, அதன் உறுப்பினர்களைக் கொலை செய்து, கைதுசெய்து அடாவடித்தனம் செய்த நேரத்தில், அந்த இயக்கத்தின் உரும்பிராய் காரியாலயத்தில் ஒருவரைச் சந்திப்பதற்காக தோழர் வி.ஏ.கந்தசாமி அங்கு சென்றிருக்கிறார். அப்பொழுது அவர் அந்த இயக்கத்துடன் இணைந்திருக்கவில்லை.


V.A.Kanathasamy

அவர் அங்கிருந்த நேரத்தில் அந்தக் காரியாலயத்தைப் புலிகள் துப்பாக்கிகள், கைக்குண்டுகள் சகிதம் சுற்றிவளைத்துத் தாக்கியிருக்கிறார்கள். அதில் தோழர் வி.ஏ.கந்தசாமியும் சிறு காயங்களுக்கு உள்ளாகியிருக்கிறார். பின்னர் புலிகள் அங்கிருந்த எல்லோரையும் கைதுசெய்து யாழ்ப்பாணம் வைமன் வீதியிலிருந்த கிட்டுவின் காரியாலயத்துக்குக் கொண்டு சென்று தடுத்து வைத்திருக்கின்றனர். சற்று நேரம் கழித்து அங்கு வந்த கிட்டு எல்லோரையும் பார்த்துவிட்டு தோழர் வி.ஏ.கந்தசாமியிடம் வந்து “நீங்கள் எப்படி இங்கு வந்தீர்கள்?” என வினவியிருக்கிறார். தோழா கந்தசாமி சொன்ன விபரத்தைக் கேட்ட கிட்டு, அங்கிருந்த தனது இயக்க ஆட்களைக் கூப்பிட்டு, தோழர் கந்தசாமியின் காயத்துக்கு மருந்து கட்டிவிட்டு அவரை அனுப்பி வைக்கும்படி சொல்லிவிட்டுப் போயிருக்கிறார்.

இந்த இரண்டு சம்பவங்களும் புலிகள் இயக்கத்தில் பிழைப்புக்காகச் சேர்ந்த புதுவை இரத்தினதுரை போன்றவர்களினதும், கிட்டு போன்ற (பிழையானவராக இருந்தாலும்) உண்மை விசுவாசிகளதும் நடைமுறையை எடைபோடப் போதுமானதாகும்.

இத்தகைய ஒரு புதுவை இரத்தினதுரையிடம் தான் எனது மனைவி எனது விடுதலைக்கு உதவி செய்யக்கோரிப் போயிருக்கிறார். எனது மனைவிக்கு இரத்தினதுரையை முன்பின் தெரியாது. அவர் எமது கட்சியில் முன்பு இருந்தவர் என்பது மட்டும் தெரிந்திருந்தபடியால், ஏதாவது உதவி செய்யக்கூடும் என்ற நப்பாசையில் அவரை நாடிச் சென்றிருக்கிறார்.

ஆனால் புதுவை இரத்தினதுரை தன்னால் உதவ முடியவில்லையென்றாலும், அந்தரித்துச் சென்ற ஒர் அபலைக்கு ஆறுதலாக நாலு வார்த்தைகள் தன்னும் கூறாது முகத்தில் அடித்தது போல, “செய்த பிழையையும் செய்துபோட்டு உதவிக்கும் வந்திட்டியளோ?” என எனது மனைவியிடம் பாய்ந்திருக்கிறார். மனைவி கவலையுடன் திரும்பிவிட்டார்.

பின்னர் நான் விடுதலையாகி வந்தபின்னர் நா.யோகேந்திரநாதனின் மனைவியின் மறைவு கேட்டு, அவரது மரணச் சடங்கில் கலந்து கொள்வதற்காக உரும்பிராயில் உள்ள அவர்களது வீட்டுக்குச் சென்றிருந்த போது, அங்கு வந்த புதுவை இரத்தினதுரை என்னைப் பார்த்துச் சிரித்துவிட்டு, எனதருகில் அமர்வதற்காக வந்தபோது நான் அதைக் கவனிக்காதது போல மெல்ல எழுந்து வெளியே வந்துவிட்டேன்.

பின்னர் 1990ல் புலிகளை இராணுவம் யாழ்ப்பாணத்தில் இருந்த விரட்டியடித்த பின்னர் அவர்கள் அனைவரும் கிளிநொச்சி சென்று முகாமிட்டனர். தமிழ்ச் செல்வன், அன்ரன் பாலசிங்கம் போன்ற உச்சாணிக் கொப்பில் இருந்த புலித் தலைவர்கள் கிளிநொச்சிப் பகுதியில் இருந்த வசதியான வீடுகளை எடுத்துத் தங்கிவிட, புதுவை இரத்தினதுரை கவனிப்பாரற்று நடுத்தெருவில் நின்று தவிக்க வேண்டியதாயிற்று.

அந்த நேரத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்து இயக்கச்சியில் எனது மனைவி வீட்டில் தங்கியிருந்த எம்மை, வன்னிக்குச் செல்லுமாறு அங்குள்ள புலிகள் தினசரி வந்து நச்சரித்ததால், அங்கு ஒரு வீடு பார்த்து வருவதற்காக நான் மட்டும் கிளிநொச்சி சென்றிருந்தேன். அங்கு ஒரு வீடு எடுக்கும் முயற்சியாக நான் யோகேந்திரநாதனின் உதவியை நாடி அவரது இல்லத்துக்குச் சென்றிருந்த வேளையில், புதுவை இரத்தினதுரையும் அங்கு வந்து சேர்ந்தார். அவரைக் கண்டதும் நான் அவரை நேரில் சந்திக்க விரும்பாமல் அங்கிருந்த அறையொன்றுக்குள் மறைந்து கொண்டேன். இரத்தினதுரை தனது கஸ்டங்களை யோகேந்திரநாதனிடம் எடுத்துச்சொல்லி, தன்னை எல்லோரும் கைவிட்டுவிட்டதாகவும், தனது குடும்பம் வசிப்பதற்கு யோகேந்திரநாதனின் வளவுக்குள் ஒரு கொட்டிலாவது போட்டுத்தரும்படி வேண்டியதைக் கேட்டுத் திகைத்தேன்.

தொடரும்